**காரைதீவு பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காரைதீவு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காரைதீவு பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,746,422 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இறுதிக் கணக்கறிக்கை தயாரிப்பில் மேற்படி விடயத்தினை கருத்திற் கொண்டு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கலாச்சார மண்டப வாடகை மூலம் பெற்ற முற்பணம் ரூபா 295,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் உள்ளுராட்சி திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,300,000 தொகையான 04 நிர்மாணங்களின் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்காக செலுத்தவேண்டிய ரூபா.1,056,992 தொகை நடைமுறையல்லா பொறுப்பாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், இக்கடன் மூலம் அமைக்கப்பட்ட கலாச்சார | - மேற்படி - | - மேற்படி - |

மண்டபத்தின் சுற்று மதில் ரூபா 1,777,911 தொகை காணிகட்டிடக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 4,948,029 ஆக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,947,941 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 25,000 | 3,000 | 3,000 | - | 25,000 | - | - | - |
| (ii) | வாடகை | 8,275,000 | 6,353,768 | 4,567,470 | 1,786,297 | 7,920,000 | 5,577,924 | 4,364,145 | 1,893,741 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 3,355,000 | 3,286,750 | 3,286,750 | - | 3,808,500 | 2,713,043 | 3,243,043 | 2,695,342 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,530,000 | 2,630,622 | 2,630,622 | - | 9,723,000 | 8,387,895 | 8,387,895 | - |
| (v) | கூட்டுத் தொகை | 18,185,000 | 12,274,140 | 10,487,842 | 1,786,297 | 21,476,500 | 16,678,862 | 15,995,083 | 4,589,083 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய அங்காடி வர்த்தக நிலைய மற்றும் கடற்கரைப் பூங்கா வாடகை உட்பட ரூபா 75,843 காணப்படுவதுடன் அவை 1 தொடக்கம் 14 ஆண்டுகள் வரை அறவிடப்படாமல் காணப்பட்டிருந்தன. | கடற்கரை பூங்கா வாடகைதாரர் இறந்தமையினால் அதனை அறவிடுவது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் கேள்வி மீதான இறைச்சிக் கடை குத்தகை வழங்கலினால் பெறவேண்டிய ரூபா 1,680,407 தொகை அறவிடப்படாமல் காணப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 442,773 தொகை 23 ஆண்டுகளுக்கு மேலாக 26 இறைச்சிக் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியதாக இருந்தது. | அடையாளம்காண முடியாத தொகைகளினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வடகிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா 14,347,200 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்ட கடைத்தொகுதிகளில் 17 கடையறைகளினை பல வருட காலமாக வாடகைக்கு விடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட இடத்திற்கு நுகர்வோர்களது வருகை குறைவாக காணப்படுகின்ற காரணத்தினால் கடைகளை வாடகைக்கு எடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. | கடையறைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முறையான திட்டமொன்றினை வகுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கலாச்சார மண்டபத்தினை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக முறையான நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்துவதற்கும் மற்றும் வளிச்சீராக்கி வசதிகள் ஏற்படுத்துவதனூடாக கலாச்சார மண்டபத்தின் பாவனை சுழற்சியை மக்கள் மத்தியில் அதிகரிப்பதனூடாக சபை வாடகை வருமானத்தினை அதிகரிக்கும் நோக்குடன் ரூபா 2,583,960 பெறுமதியான 04 வளிச்சீராக்கிகள் 2022 மே 19 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரைக்கும் அதனைப் பயன்படுத்தி மக்களுக்கு குளிரூட்டிய சேவை மற்றும் வருமானத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூர் அபிவிருத்தி நிதித் திட்டத்தினூடாக நிதியேற்பாடுகளினைப் பெற்று மேற்படி வேலையினை பூரணமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூர் அபிவிருத்தி நிதித் திட்டத்தினூடாக நிதியேற்பாடுகளினைப் பெற்று மேற்படி வேலையினை பூரணமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 633 குடும்பங்களிடமிருந்து அறவிட வேண்டிய திண்மக்கழிவகற்றல் கட்டணம் ரூபா 651,420 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திண்மக்கழிவு கட்டணங்களினை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் அலுவலகக் கட்டிடம், கலாச்சார மண்டபம் அமைந்துள்ள காணி, பொதுச்சந்தை கட்டிடக் காணி மற்றும் திண்மக்கழிவகற்றல் நிலையம் ஆகியவற்றினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் காணிகளினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபையினால் பயன்படுத்தப்படும் காணிகளினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 29 வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதிகளினை மீள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் பெறுமதிகளினை மீள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 04 லொறிகள், 04 உழவு இயந்திரங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கில்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் மற்றும் ஏனைய வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| சபையில் கடன்பெற்று இறந்த மற்றும் ஓய்வுபெற்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 32,860 கடன் நிலுவைத் தொகையினை உரியவர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிட மிருந்து கடன் நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களிட மிருந்து கடன் நிலுவைகளினை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சேதனப் பசளை உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் ரூபா 289,750 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட மல்டி சொப்பர் இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இயந்திரத்தினை பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சேதனப் பசளை உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |